அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 13/2018

எனது இலக்கம் : EST 5/3/4/4 – Vol.1

அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.08.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
*திணைக்கள தலைவர்கள்*

**<u>சம்பள மாற்றத்தினை பிழையின்றி நிறைவேற்றல் மற்றும் விசேட சம்பள ஏற்றம், விசேட படிகள் சம்பந்தமாக உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்</u>**

பதவியணியினரின் சம்பள மாற்றத்தினை சரிவர மேற்கொள்ளாமையும், சில சந்தர்ப்பங்களில் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது அலுவலர்களுக்கு விசேட சம்பள ஏற்றங்கள் மற்றும் படிகளை வழங்குவதனூடாக, சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதன் காரணமாக, இனிமேல் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் உள்ளடங்கிய சுற்றறிக்கையொன்று குறித்த அதிகாரிகள் தொடர்பாக வ ளியிடப்பட வேண்டுமென 2018.01.30 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டது.

02. அதற்கிணங்க அப் பாதகமான நிலைமைகள் எதிர்வரும் காலங்களில் ஏற்படுவதனை தவிர்த்துக் கொள்வதற்காக பதவியணியினரின் சம்பள மாற்றங்களை மேற்கொள்ளல் மற்றும் அலுவலர்களுக்கு விசேட சம்பள ஏற்றங்கள் மற்றும் படிகள் வழங்குவதனை முறைமைப்படுத்தி அதிகாரிகளின் அங்கீகாரத்தின் பேரில் மேற்கொள்ளுமாறும் ஏதேனும் பிரச்சினையொன்று மேலெழும் பட்சத்தில் குறித்த சகல தகவல்களுடனும் முறைசார்ந்த அதிகாரிகளை தொடர்புகொண்டு தேவையான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்/. பத்மறி ஜயமான்ன
செயலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு